Y.M.C.A

முரசொலி

பக்கங்கள் நான்கு          விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 256 ஆங்கீரச ஆவணி 02 (18.08.1992) செவ்வாய்

## எயர்லங்கா விமானத் தடுப்பு சட்ட அதிகாரிகள் மலேசியாவில்

எயர்லங்கா விமானம் ஒன்று மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் தடுத்து வைக்கப்பட்டது பற்றி ஆராய சட்ட மா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த இரண்டு அதிகாரிகள் மலேசியா சென்றுள்ளார்கள். மலேசியா பிரயாண முகவரமைப்பு முன்வைத்த நட்டஈட்டு கோரிக்கை பற்றி இவர்கள் பரிசீலனை நடத்துவார்கள். இரண்டு லட்சம் அமெரிக்க டொலர் நட்டஈட்டுத் தொகை எயர்லங்கா நிறுவனத்தால் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. ஆகஸ்ட் இருபத்தைந்தாம் திகதி நடைபெறவுள்ள வழக்கின் தீர்ப்பு வெளிவந்த பின்பே நட்டஈட்டுத் தொகை விடுவிக்கப்படும் — 04 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு கிழக்கு யுத்தத்தினால் தென்பகுதியிலும் மக்கள் பாதிப்பு

## இராணுவ செலவினால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதாகவும் தெரிவிப்பு

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் முழுநாட்டு மக்களுமே சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

தெற்கில் வாழும் மக்கள் நாளாந்தம் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர் என விமர்சகர்கள் கூறுகின்றனர். இவ்வாறு வெரித்தாஸ் வானொலி தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

யுத்தம் நடைபெறும் பகுதியில் வாழும் மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பற்றாக்குறை, போக்குவரத்து வசதிகள் இல்லாமை போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

வடக்குக் கிழக்கு யுத்தத்துக்கான செலவைத் தாங்கும் பொருட்டு அரசு விதிக்கும் வரிகள் மக்களின் வாழ்க்கையைப் பாதிப்பதாகவும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

சிறு ஆயுதங்கள் மற்றும் மோட்டார் குண்டுகள் பாவனை உள்ளிட்ட இராணுவச் செலவுகளாக ஒவ்வொரு மாதமும் பல கோடி ரூபாவை அரசு செலவிட வேண்டியுள்ளது எனவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## டென்சில் கொப்பேகடுவவின் தகனம் சுதந்திரசதுக்கத்தில் நடத்த பொலிஸார் ஆலோசனை கூறினர்

1983இல் நடைபெற்றது போன்று ஓர் இனக்கலவரம் மூளக்கூடும் என்பதைக் கருத்திற்கொண்டு காலஞ்சென்ற லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் தகனக்கிரியைகளை சுதந்திர சதுக்கத்தில் நடத்துவதே நல்லது என பொலிஸார் பாதுகாப்பு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினர்.

இதையடுத்து காலஞ்சென்ற ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மனைவியுடன் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தொடர்பு கொண்டார். ஆனால் திருமதி கொப்பேகடுவ குடும்பமுடிவின் படி ... 4 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் இருந்து ஷெல், கலிபர் தாக்குதல்

மண்டைதீவு முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று காலை 11.30 மணியளவில் யாழ் நகரை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஷெல்கள் யாழ் கரையோர பகுதிகளில் விழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து சுமார் 15 நிமிட நேரமாக கரையோர பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் கலிபர் தாக்குதலை மேற்கொண்டவண்ணம் இருந்தனர் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

47, 12

## ★ ஆங்கில ஆசிரியர் பரீட்சை கல்வித்திணைக்களத்தில் வர்த்தமானி உள்ளது

மாவட்ட ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 1992 க்குரிய வர்த்தமானியை யாழ் கல்வித்திணைக்களத்தில் பார்வையிடலாம் என யாழ் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர் கொழும்பு - 2 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இருந்து இத்திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்ப முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**நாட்டினைக் காக்க காட்டினை வளர்ப்போம்**

## வட, கிழக்கு புதிய தளபதிகள் தமிழரின் நம்பிக்கை பெறவேண்டும்

1983ஆம் ஆண்டு நடந்த கொண்டாட்டபோல் அல்லாது தென்பகுதி மக்கள் இப்போது யதார்த்த பூர்வமாக செயற்பட ஆரம்பித்துள்ளனர் என விமர்சகர்கள் கூறுவதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உள்ளிட்ட ஒன்பது இராணுவ உயரதிகாரிகள் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டபோதும் எந்த வித இனவாத அசம்பாவிதங்களும் இடம் பெறாமை மேற்படி கருத்தை உறுதிப்படுத்துகிறது எனவும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

வடக்கு-கிழக்குக்கு புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் இரண்டு இராணுவ தளபதிகளும் தூரசிந்தனையுடன் தமிழ்மக்களின் நம்பிக்கையை பெறக்கூடியவகையில் செயற்படுவார்களானால் அது விடுதலைப்புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு உதவும் என விமர்சகர்கள் கூறுகின்றனர் எனவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## 2 படையினர் பலி

மட்டக்களப்பில் தெவட்ட தீவு எனும் பகுதியில் வீதியில் கிடந்த கண்ணிவெடியை செயலிழக்க முயன்ற இரு படையினர் அது வெடித்ததில் பலியாகினர். ஒருவர் காயமடைந்தார்.

## அ'புரத்திலிருந்து ஆயுதங்கள்

யாழ் குடாநாடு மீதான உக்கிரத் தாக்குதல்களுக்கான ஆயுதங்களைப் படையினர் அநுராதபுர தளத்திலிருந்து பலாலிக்கு எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## போட்டிப்பரீட்சைபுள்ளிகளே பதவியுயர்வுக்கு கணிக்கப்படும்

அதிபர் தரம் 1, 2, 3 ஆகியவற்றிலுள்ள வெற்றிடங்களை போட்டிப்பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் மத்தியிலிருந்து தேர்வுசெய்து நேர்முகப் பரீட்சை நடத்தி நிரப்புவதற்கான ஒழுங்குகளைக் கல்விச் சேவைச் சபை செய்துள்ளது. இதற்கான நேர்முகப்பரீட்சைகள் ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பரில் முடிவடையும் என க.சே. சபை வட்டாரங்கள் தம்மிடம் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

இம்முறை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்கள் வர்த்தமானி அறிவிப்பின் படி அடிப்படைத் தகைமைகளைக் கொண்டவர்களாகக் காணப்பட்டால் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் நேர்முகப் பரீட்சைக்கு எவ்வித ... 4 ஆம் பக்கம் பார்க்க

## தபால்பொதிகள் எடுத்துவர அரச அதிபர் வாகனவசதி

நேற்று கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு குமாரி கப்பலில் வந்த தபால் பொதிகள் வடபிராந்திய பிரதித் தபால் மா அதிபரின் துரித முயற்சியால் எடுத்துவரப்பட்டன.

பருத்தித்துறையில் இருந்து தபால் பொதிகளை உடன் எடுத்துவருவதற்கு யாழ் அரச அதிபர் வாகனவசதி ஒழுங்குகளை நேற்று செய்து கொடுத்தது குறிப்பிடத்தக்கது. 06

## நல்லூரில் இலங்கை வங்கி கருமபீடம்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தையொட்டி இலங்கை வங்கி மேற்றாக் கிளை, யாழ்ப்பாணம் தனது கருமபீடமொன்றை இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் 28-08 92 வெள்ளிக்கிழமை வரை நல்லூர் கந்தசுவாமி கோவில் நாவலர் மண்டபவளாகத்துள் அமைத்துள்ளது.

இக்கருமபீடத்திற்கு வருகை தந்து இலங்கை வங்கி, ஆற்றும் சேவைகளான சேமிப்புச் சான்றிதழ்கள், சிறுவர்சேமிப்புக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், நிரந்தர வைப்புகள், வெளிநாட்டு வங்கிச் சேவைகள், மாவீர் பொற்கணக்குகள் ஆகியவற்றை அறிந்து பயன் பெறுமாறு வாடிக்கையாளர்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் பிரதான முகாமையாளர் கேட்டுக்கொள்கின்றார்.

## கோமாரி கப்பல் நேற்று வந்தது

கோமாரி கப்பல் நேற்று காலை 10 மணியளவில் பருத்தித்துறைத்துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் 1600 மெ. தொன் மாவும், 1000 மெ. தொன் அரிசியும், 500 மெ. தொன் சீனியும், 10 மெ. தொன் ரின் மீனும் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## நீதிமன்றில் ஆஜர்

ஈ பி ஆர், எல். எப் பத்மநாபா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 18 பேரும் நேற்று இதற்கென அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணை ஆரம்பமாகவுள்ளது.

## ராவ் உடன் பேச்சு

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவை சந்தித்து தமிழக அரசியல் நிலை குறித்து பேச்சு நடத்தியதாக இந்திய வானொலி தெரிவித்தது.

... 4 ஆம் பக்கம் பார்க்க

● ஆயுதம், தளபாடங்கள் இரவிரவாக வந்தன

# குடாநாடுமீதானதாக்குதலுக்கு படையினர் தயாராகிறார்கள்!

யாழ் குடாநாட்டின் மீதான இராணுவத்தாக்குதல்கள் எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாமென பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி நேற்றைய கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'இந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குத் தேவையான இராணுவத்தளபாடங்கள், ஆயுதங்கள் போன்றவை இரண்டு தினங்களாக இரவிரவாக அனுராதபுரத்திலிருந்து பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன' எனவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இரண்டு தினங்களாக குடாநாட்டின் வான் பிரதேசத்தில் படை விமானங்களினதும், உலங்கு வானூர்திகளினதும் நடமாட்டங்கள், கண்காணிப்பு வேவு நடவடிக்கைகள் அதிகமாக உள்ளதை அவதானிக்க முடிவதாக எமது நிருபர்கள் தெரிவிக்கிறார்கள்.

நேற்றுக் காலையும் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் பலாலிக்கு வந்து சென்றதை பலரும் அவதானித்தனர்.

நேற்று முன்தினம்பகல் முழு நாளும் உலங்கு வானூர்தி ஒன்று தென்மராட்சிப் பகுதி வழியாக அடிக்கடி பறந்து திரிந்ததாகவும் எமது நிருபர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கனத்தைக் கலவரம்; இதுவரை 15 பேர் கைது!

கொழும்பு கனத்தைப் பொது மயானத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ன ஆகியோரின் இறுதிக் கிரியைகளின்போது குழப்பம் விளைவித்தவர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் பலர் தேடப்பட்டு வருகிறார்கள்.

தாக்குதலுக்கு உள்ளானவர்களின் தகவல்களின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

## நேற்று முதல் இயங்குகிறது

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச செயலகம் நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்த செயலக அதிகாரியாகக் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய எம். அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஆசிரியர் தின கூட்டங்களை பகிஸ்கரிக்க சங்கங்கள் முடிவு

ஆசிரியர்களின் சம்பள மீளாய்வுக்காக நியமிக்கப்பட்ட கல்வி அமைச்சு அதிகாரிகளைக் கொண்ட சம்பள மீளாய்வுக் குழு சிபார்சு செய்த சம்பளத்திட்டத்தை ஏற்று நடைமுறைப்படுத்துவதென அரசு அறிவிக்கும் வரை சர்வதேச ஆசிரிய தினம் தொடர்பாக அமைச்சு நடத்தும் அனைத்துக் கூட்டங்களையும் சகல ஆசிரியர் சங்கங்களும் பகிஸ்கரிப்பதென ஏகமனதாக முடிவு செய்துள்ளன.

கடந்த 10 ஆம் திகதி சகல ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளையும் கல்வி அமைச்சுக்கு கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு ஏ. ரி. அலஸ் அழைத்திருந்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. மெண்டிஸ், வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தில் இரு நாட்களுக்கு செய்யும் செலவைத் சேமித்தாலே ஆசிரியர்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட புதிய சம்பளத்திட்டத்தை அமுல்படுத்தலாம் என்பதை புள்ளி விபரத்துடன் விளக்கினார்.

இக்கூட்டத்தில் இ.ஆ.ச சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் பேசுகையில்:-

ஆசிரியர்களுக்கான அரித்த முவை உண்மையான சம்பளத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இக்கோரிக்கைகளை ஏனைய சங்கங்களும் ஏகோபித்து வலியுறுத்தியமையை அடுத்து, 'சர்வதேச ஆசிரியர் தினம் தொடர்பாக எந்த விதமான கலந்துரையாடலும் இடம்பெறாது. கூட்டத்தை ஒத்திவைத்த இராஜாங்க அமைச்சின் செயலாளர் இவ்விடயத்தை கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம்.டி.டி பீரிஸ் அவர்கள் ஊடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார்.

## குரக்கன் செய்கை

ஆடிப்போக குரக்கன் செய்கை இவ்வருடம் அச்சுவேலிப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அச்சுவேலி வடக்கு, தெற்கு மேற்கு பகுதிகளில் சுமார் 750 பரப்பு தோட்ட நிலத்தில் குரக்கன் பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இதில் பெரும்பாலான விவசாயிகள் "கெயர்" நிறுவனத்தின் விவசாயத்திட்டத்தின் கீழ் உதவிகளைப் பெற்று குரக்கன் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளவர்களாவர். இப்பகுதியில் சுமார் 210 விவசாயிகள் வரையில் இவ்வுதவிகளைப் பெற்று பயனடைந்துள்ளதாக அறியப்படுகின்றது. 73

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பதவி வெற்றிடம்

உடற்கல்விப் போதனாசிரியர் தரம் II (ஆணும், பெண்ணும்) பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992. 09. 15 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்: 3500—10X 100—4500/= மாதமொன்றுக்கு.

தகைமைகள் ;-

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் உடற்கல்விப்பட்டம் அல்லது உடற்கல்வியில் அதற்குச் சமனான அல்லது உயர் தகைமைகளுடன் அத்துறையில் பட்டமொன்றைப் பெற்றதன் பின்னர் பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதில் ஐந்தாண்டு அனுபவம்.

அல்லது

(ஆ) நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய தேசிய விளையாட்டு அணி ஒன்றின் உறுப்பினராகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அல்லது பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்துவதில் குறைந்த பட்சம் ஆறாண்டு அனுபவமுடைய தேசிய வீர முதல்வன்.

அல்லது

(இ) தேசிய விளையாட்டு அணியில் உறுப்பினராகவிருந்த எட்டு ஆண்டுகளுக்கு குறையாத சேவையுடன் அத்துறையில் எட்டு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டுள்ள உடற்கல்விப் போதனாசிரியர்.

வயது : 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு : நேர்முகப் பரீட்சை மூலம்

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23×10 ச.மீ அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும் விதிக்கப் பெற்ற படிவங்களில் செய்யப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளிலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

உடற்கல்வி போதனாசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதிவாளர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992, 08, 13

08029

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## மகாபொல கொடுப்பனவு 8ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன

### முதலாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவ பீடம்<br>கலைப்பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப்பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப்பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 18 08 . 92<br>20 . 08 92<br>24 . 08 . 92 | 9.00 - 12 00 மு.ப<br>9.00 - 12.00 மு.ப.<br>9 00 - 12.00 மு.ப. |

### இரண்டாம் வருடம்

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம்<br>கலைப்பிரிவு<br>வர்த்தகப்பிரிவு<br>வியாபார நிர்வாகப்பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப்பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 18 08 . 92<br>20 . 08 92<br>24 . 08 92 | 1 30 - 3 00 பி.ப,<br>1.30 - 3.00 பி.ப.<br>1,30 - 3,00 பி.ப. |

### மூன்றாம் வருடம்

| | | |
|---|---|---|
| கலைப்பிரிவு<br>வர்த்தகப்பிரிவு<br>வியாபார நிர்வாகப்பிரிவு<br>மருத்துவபீடம்<br>உயிரியல் விஞ்ஞானப்பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 19 . 08 . 92<br>21 . 08 . 92<br>27 . 08 92 | 9 00 - 12.00 மு.ப.<br>9 00 - 12 00 மு.ப.<br>9,00 - 12,00 மு.ப. |

### நான்காம் வருடம்

| | | |
|---|---|---|
| கலைப்பிரிவு<br>வர்த்தக பிரிவு<br>வியாபார நிர்வாகப்பிரிவு<br>மருத்துவ பீடம் 4-ம். 5 ஆம் வருடங்கள்)<br>உயிரியல் விஞ்ஞானப்பிரிவு<br>பௌதிக விஞ்ஞான பிரிவு | 19 . 08 . 92<br>21 , 08 . 92<br>27 . 08 . 92 | 1.30 - 3.00 பி.ப.<br>1.30 - 3,00 பி.ப.<br>1 30 - 3 00 பி.ப. |

1ஆம், 2ஆம் வருட விவசாயபீட மாணவர்களுக்கான மேற்படி கொடுப்பனவு விவசாயபீடத்தில் கொடுக்கப்படும்.
கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை.

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை.
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

08032

பதிவாளர்

# நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 1992

## வாகனங்கள் - 1 - இடபம்

இடபம்

இடபம் நான்கு கால்களும் நான்கு அந்தக் கரணங்களையும் குறிக்கும். இக்கரணங்கள் சத்தியில் ஒடுங்க ஞானம் தோன்றும், இஞ்ஞானம் பசு வடிவமாகிய ஆன்மஞானமாகும் இவ்வான்ம ஞானத்தின் (பசுஞானத்தின) மேலாகிய பதிஞானத்தில் இறைவன் விளங்குகின்றார் என்பதை இடப வாகனத்தில் அவர் அமர்ந்தருளுவது புலப்படுத்தும் என்பர்.

சமத்துவம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கம் ஆகிய நான்கு குணங்களும் தரும தேவதையின் நான்கு குணங்கள். அவை நான்கு கால்களாய் அமைய தூய்மையைக் காட்டும் வெண்ணிறத்தோடு விளங்கும் அத்தருமதேவதையை இறைவன் தமது வாகனமாகக் கொண்டு எழுந்தருளுவர் என்பதும் ஒன்று.

ஒரு காலத்தில் ஞானமும் விஷ்ணுவும் வேண்டிக் கொண்ட படியால் அவ்விரண்டனையும் இடபவாகனமாக்கி இறைவன் எழுந்தருளினார் என்பது புராண வரலாறு.

("நக்காரோடை ஞானன்பசு ஏறி..." எனத் தொடங்கும் திருக்கேதீச்சரத் திருப்பதிகம் காண்க)

புண்ணிய வடிவான இடபத்தின் மீது இறைவன் காட்சி கொடுக்கின்றார் என்பது பிரத்தியட்சம், பொறுமையே எருது என்றுஞ் சொல்வர்.

(ஆதாரம்: சைவ சமய சிந்தாமணி)

நாளை : ஐந்தலை நாகம்

# இன்றைய தெய்வீக இசையரங்கு

## சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை 6.00 - இரவு 8.00

| பாட்டு | வயலின் | மிருதங்கம் |
|---|---|---|
| மேரி சறோஜா ஜஸ்மின் | பாக்கியலக்ஷ்மி | எஸ். துரைராஜா நடராஜா |

# இணைப்பு இல்லாத தீர்வால் பயனேதுமில்லை

# வட-கிழக்கு இணைந்தேயுள்ளன

# பிரிக்கும் முயற்சிக்கு இடமேயில்லை!

**- அமைச்சர் தொண்டா**

வடக்கு, கிழக்கு இணைப்பை இ.தொ.கா வலியுறுத்தும் என அதன் தலைவரும் அமைச்சருமான சௌ. தொண்டமான் அறிவித்துள்ளார்.

மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் விரைவில் வெளியிடப்படவுள்ள யோசனைகளில் இணைப்பு நிராகரிக்கப்படுமேயானால் தமிழ்க் குழுக்களுடன் சேர்ந்து அதனை வலியுறுத்தவும் இ.தொ.கா தயாராக இருக்கிறது என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

'வட மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் ஓர் அதிகார பரவலாக்கத்தின் பிராந்தியமாகக் கருதாத எந்தவொரு அரசியல் தீர்வும் அர்த்தமற்றது. தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத அத்தகையதொரு தீர்வை முன்வைப்பதனால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை'

'வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசமாகும். இவற்றை இணைக்க வேண்டுமெனக் கேட்கவேண்டிய அவசியமில்லை. அவை இணைந்துதான் இருக்கின்றன. இவ்வாறு அவற்றை இணைக்க வேண்டுமென்றபேச்சுக்கு இடமில்லை. பிரிக்க எடுக்கும் முயற்சியும் பயனற்றது'

'இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கேற்ப வட-கிழக்கு நிரந்தர இணைப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மு.காங்கிரஸின் நிபந்தனைகளை தமிழ்க் கட்சிகள் ஏற்கா

வடக்கு, கிழக்கு இணைப்பு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ள நிபந்தனைகளை தமிழ்க் கட்சிகள் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திபொன்று தெரிவிக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸ்-தமிழ்க் கட்சிகளின் சந்திப்பின்போது வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் சில நிபந்தனைகளைத் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தொண்டாவுக்கு சிறப்புப் பட்டம்

அமைச்சர் தொண்டமானுக்கு 'தமிழ் மக்களின் மாணிக்கம்' என்னும் பட்டம் சூட்டப்பட்டுள்ளது.

கண்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் தொண்டமானுக்கு இந்தச் சிறப்புப் பட்டம் அப்பகுதித் தமிழ் அமைப்புக்களினால் சூட்டப்பட்டது.

## ரத்மலான கொள்ளை, கொலை; இராணுவத்தினர் மீது சந்தேகம்!

ரத்மலான ரயில்வே வேலைத்தள சம்பளப்பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் இராணுவத்தை விட்டு விலகிச் சென்ற சிலர் சம்பந்தப்பட்டிருக்கலாமென இரகசியப் பொலிஸார் தற்பொழுது சந்தேகிக்கின்றனர்.

இச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் வழங்கிய தகவல்களினதும் ஆரம்ப விசாரணைகளினதும் அடிப்படையில் இந்த சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்த கொள்ளைச் சம்பவத்தில் சம்பளப் பணம் 48 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதுடன் இரு புகையிரதப் பகுதி ஊழியர்களும் கொள்ளையர்களின் சூட்டினால் மரணமாகியிருந்தனர்.

## சென் றோக் வெற்றி பெற்றது

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டுவரும் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில், சென் றோக் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை 4 : 2 என்ற கோல் கணக்கில் வென்றது.

அரியாலை கசிப்பிள்ளை விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் இப் போட்டி இடம்பெற்றது. 16

## வெளிநாட்டுத் தளங்களை அமெரிக்கா மூடுகிறது

அமெரிக்கா வெளிநாடுகளில் உள்ள தனது இராணுவத் தளங்களை குறைப்பதற்கு முடிவெடுத்துள்ளது.

இதன்படி ஐரோப்பியாவிலுள்ள தனது 69 தளங்களையும், தென்கொரியாவிலுள்ள ஒரு தளத்தையும் அமெரிக்கா மூடும்.

பிரிட்டனில் தற்பொழுது அமெரிக்காவின் 5 தளங்கள் உள்ளன இவற்றில் நான்கு உடனடியாக மூடப்படவுள்ளன மற்றையதன் நடவடிக்கைகள் குறைக்கப்பட்டு 1993 செப்டம்பர் 15ஆம் திகதியுடன் அதுவும் மூடப்படும்.

## உயர்தரப்பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் வேலை இன்று ஆரம்பம்

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் வேலை இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது.

இந்த விடைத்தாள்களைத் திருத்தும் வேலைகளுக்கென 4200 பேர் திரட்டப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 31 ஆம் திகதி விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி முடிவுறும்.

கொழும்பில் 12 மத்திய நிலையங்களில் திருத்தப்பணி இடம் பெறும்.

## ஸ்ரீரங்கம் சுவாமிகள் மரணம்

ஸ்ரீரங்கம் ஜெய சுவாமிகள் முத்தியடைந்துள்ளார். இவரது பூதவுடல் ஸ்ரீரங்கத்தில் அவரது ஆச்சிரம வளவில் ஞாயிறு இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரின் நினைவாக அங்கு பிருந்தாவனம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

## தென்னை நாற்றுக்களை விநியோகிக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்ட விவசாய பீடத்தில் 2400 தென்னை விதைகள், நாற்றுக்களைப் பெறுவதற்கான நாற்றுப் போடப்பட்டுள்ளது.

அடுத்தமாத ஆரம்பத்தில் ஏற்ற காலத்தில் விளைவைத் தரக்கூடிய சி ஆர் ஐ 65 என்னும் இனத்தைச் சேர்ந்த சுமார் 5000 நாற்றுக்களை நுணுகலையில் இருந்து எடுத்துவந்து நாற்றுப் போட்டு விநியோகம் செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 55

## ஆரம்ப வகுப்புக்களின் ஆசிரியர்தொகை நிர்ணயம்

ஆரம்ப வகுப்புக்களான ஆண்டு 1 தொடக்கம் 5 வரையுள்ள வகுப்புக்களுக்கு ஆரம்பக் கல்வியைக் கற்பிப்பதற்கான ஆசிரிய தேவைகள் பற்றி வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சகல கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளது.

இதன்படி ஆரம்பக் கல்வியைப் போதிக்க ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை குறைந்த பட்சம் ஒவ்வொரு 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் வகுப்புக்களில் இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் ஆண்டு 4 தொடக்கம் 5 வரையுள்ள வகுப்புக்களில் அந்நிய பாடங்களைக் கற்பிக்க ஒவ்வொரு 250 மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர் வீதம் இருக்கவேண்டும் என்றும் இச் சுற்றறிக்கை மூலம் கூறப்பட்டுள்ளது. 12

## இணைப்புக்கு ஆதரவு வழங்க முஸ்லிம்கள் நிபந்தனை

வடக்கு கிழக்கிலுள்ள, முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதான முஸ்லிம் மாகாண சபையை தமிழ்க் கட்சிகளும் அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் வடக்குக் கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் பூரண ஆதரவு வழங்க வேண்டும்.

புத்தளத்தில் தற்பொழுது தங்கியிருக்கும் வடபகுதியைச் சேர்ந்த முஸ்லிம்கள் இப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்

கடந்த சனிக்கிழமை புத்தளம் நகரசபை மண்டபத்தில் கூடிய நூற்றுக்கணக்கான இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் இந்த நிபந்தனையுடன் கூடிய தீர்மானத்தை நிறைவேற்றினர்.

## பாகிஸ்தானுடன் அமெரிக்க கூட்டு போர்ப் பயிற்சி!

காஷ்மீர் என்பது இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் சுதந்திர தின உரையில் குறிப்பிட்டதை பாகிஸ்தான் கண்டித்துள்ளது.

உறவு மேம்பட இந்த வகையிலான பேச்சுக்கள் உதவாது எனவும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதனிடையே அமெரிக்க பாகிஸ்தான் கடற்படைகளின் இருநாட்டு இரு நாள் கூட்டுப் பயிற்சி பாக் கடல் பகுதியில் நடைபெற்றுள்ளது.

முன்பு இப் பயிற்சியில் அமெரிக்க கடற்படையுடன் இந்திய கடற்படை கலந்து கொண்டமை தெரிந்ததே.

கடந்த இரண்டு வருடங்களாக உறவு பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் அமெரிக்காவும், பாகிஸ்தானும் இந்த நடவடிக்கையின் மூலம் நெருங்கி வருவதாகவும் அவதானிகள் கருதுகின்றனர்.

## 8750 ஆசிரியர்கள் 1991 இல் ஓய்வு பெற்றனர்

அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட இளைப்பாற்றல் திட்டம்காரணமாக 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1991ல் ஆசிரியர் தொகையில் பெரும் வீழ்ச்சி காணப்பட்டுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன

1990 இல் ஏறக்குறைய 8750 ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர் என இப்புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

1990 இல் 184 822 பேர் ஆக இருந்த ஆசிரியர்கள் தொகை 1991 இல் 176, 173 பேர் ஆக வீழ்ச்சியடைந்தாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தகவல்களின் அடிப்படையில் வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த பாதிப்பு காரணமாக இப்பகுதியில் இரண்டாயிரம் ஆசிரியர்கள் வடக்கு கிழக்கில் ஓய்வுபெற்றுள்ளனர் எனவும் இது தமிழ் ஆசிரியர் தொகையில் 10% வீழ்ச்சி எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. 12

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

**பதவி வெற்றிடம்**

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் 1992 - 09 - 04ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி:
சுகாதாரத் தொழிலாளி
(தற்காலிகம்)

சம்பளத் திட்டம்:
ரூபா 1775 - 8 × 30 — 2015/- மாதமொன்றுக்கு (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்.)

தகைமைகள்:
1. மலசலகூடங்கள், வடிகான்களை, முதலியனவற்றைச் சுத்தமான முறையில் பேணுவதில் திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. வயது 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு
பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு:
உணவு முத்திரை பெற்றுள்ள குடும்ப அங்கத்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டச் சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரை யொட்டிய 23 × 10 செ.மீ. அளவுடைய கடித உறைகளை அனுப்பித் தபால் மூலமாகவோ பெற விரும்புவோர், இப்பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விவரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1992-08-14
08030


## மீண்டும் மூளாய்வரை தட்டிவான்சேவை

அச்சுவேலி மினிபஸ் சங்கம் அச்சுவேலியிலிருந்து மூளாய் வரையும் 'தட்டிவான் சேவை"யை மீண்டும் நடாத்தவுள்ளது.

கடந்த 2 வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இச்சேவை பொது மக்கள் பலரின் வேண்டுகோளுக்கமைய நாளை புதன்கிழமை முதல் மீண்டும் நடத்தப்படவுள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் திரு. வ தங்கராசா தெரிவிக்கின்றார்.

## ★ காலஞ்சென்ற இராணுவ தளபதிகள் நினைவாக

# அனுதாப பேரணிகளை நடத்த இனவாத குழுக்கள் ஏற்பாடு

காலஞ்சென்ற ஜெனரல்கள் டென்சில் கொப்பேகடுவ, விமல் விஜயரட்ண மற்றும் படைவீரர்கள் நினைவாக யுத்த வீரர்களின் அனுதாப பேரணிகளை நடத்த தீவிர சிங்கள இனவாதக் குழுக்கள் தீர்மானித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை கொழும்பிலையில் இதற்கான ஏற்பாடுகள் சம்பந்தமாக கூட்டப்பட்ட கூட்டத்தில் ஹெலஉறுமய, கலாநிதி நளின் டி சில்வாவின் தேச பிரேமிக்கு பெரமுண சிங்கள சங்கத்தரணிகள் ஆகியோரின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உள் குழுவான ஹெல உறுமய சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

யுத்த வீரர்களுக்கு செலுத்தும் அதேநேரம் வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்ப்பதே இந்தக் குழுக்களின் முக்கிய குறிக்கோளாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நடாத்தவுள்ள கூட்டங்களில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலியை அழைக்கும் பொறுப்பு கலாநிதி நளின் டி சில்வாவிடம் விடப்பட்டுள்ளது.

இக் கூட்டங்களில் பேசவிருக்கப்படும் அழைப்பை ஏற்பதில் ஏற்கனவே ஹெல உறுமய பற்றி அதிருப்தியுற்றிருக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க சங்கடப்படக்கூடும் எனக் கூறப்படுகிறது.

மேலும் அதிகாரத்திலுள்ள சிலரால் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய தேசத் துரோகக் குற்றச் சாட்டுகள் பற்றியும் இவர்கள் பிரசாரம் மேற் கொள்ளுவார்கள் எனவும் கூறப்படுகிறது.

## இன்று முதல் வெளியூர் தபால்கள் விநியோகம்

கொழும்பிலிருந்து நேற்று பருத்தித்துறைக்கு குமாரி கப்பலில் வந்த தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்தினரால் எடுத்து வரப்பட்டன.

யாழ் பிரதம தபாலகத்துக்குரிய தபாற்பொதிகள் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு தபால் விநியோக சேவைகள் மேற்கொள்ளப்படுமென தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏனைய குடா நாட்டுத் தபாலகங்களுக்கான தபால் பொதிகள் வழமைபோல் அனுப்பி வைக்கப்படுமெனவும் அவ் அதிகாரி தெரிவித்தார். 06

## இறுதியில் வெற்றி எனக்கே என்கிறார் புஷ்

அமெரிக்காவில் நவம்பர் மூன்றாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள தற்போதைய ஜனாதிபதி புஷ் தனது வெற்றி உறுதி என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கருத்துக் கணிப்புக்களில் எதிரணி வேட்பாளர் கிளிங்டன் முன்னணியில் இருந்து வருவது தேர்தல் வேளையில் மாறும் எனவும் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் வெள்ளை மாளிகையின் தலைமை அமைச்சராக மாறி பிரச்சார பணிகளைக் கவனிக்கத் தொடங்கியதும் மக்கள் கருத்தில் மாற்றம் ஏற்படுமெனவும் புஷ் தெரிவித்தார்.

## சுதந்திரக்கட்சி பத்திரிகை சந்தா அனுரா குழுவினர் நிறுத்தம்

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான நாற்பத்தொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'சிறிலகா'விற்கான சந்தா செலுத்துவதை நிறுத்தத் தீர்மானித்துள்ளனர்.

மாதாந்தம் ஐநூறு ரூபா வீதம் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டு 'சிறிலகா' பத்திரிகை நிதிக்கு வழங்கப்பட்டு வந்தது.

தம்மிடமிருந்து சந்தாப் பணம் அறவிடுவதை நிறுத்துமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் நிகால் செனவிரத்னவை இந்தக் குழுவினர் எழுத்து மூலம் கோரியுள்ளனர்.

"இப்பத்திரிகை ஒருபக்க செய்திகளையும் பக்க சார்பான கருத்துக்களையும் வெளியிடுவதாக ஏன புகார்கள் எழுந்தமையினாலேயே நாம் இந்த முடிவை எடுத்தோம். சிலருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் போது வேறு சிலருக்கு அப்படி வழங்கப்படுவதில்லை எவ்வாறாயினும் பத்திரிகையின் விநியோகம் வீழ்ச்சியடைந்துள்ளது" என அனுரா பண்டாரநாயக்க தமது முடிவை விளக்குகையில் கூறினார்.

சுதந்திரக்கட்சித் தலைவி இப்பத்திரிகையின் விவகாரங்களை கவனிக்க ஐவர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார். ஆனாலும் ஜீனதாச நியதிபாலவைத் தவிர்ந்த ஏனையோருக்கு பத்திரிகைத் துறை அனுபவம் இல்லையெனக்கூறி அந்த நியமனத்தை அனுரா குழுவினர் நிராகரித்துள்ளனர்.

ராவ் ..

இந்திரா காங்கிரஸ் - அ.தி.மு.க. உறவுகள் பற்றியும் இவர்கள் விவாதித்ததாகவும் தெரிகிறது.

எயர்லங்கா...

மென எயர்லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த விவகாரம் இரண்டு அரசாங்கங்கள் சம்பந்தப்பட்டது அல்ல, இது ஒரு வர்த்தக நடவடிக்கை விவகாரம் என ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

சுதந்திரசதுக்கத்தில்...

னத்தையிலேயே நடைபெற வேண்டுமென விருப்பந்தெரிவித்துள்ளார் இதனாலேயே தகனக் கிரியைகள் கனத்தையில் நடைபெற்றதாக கூறப்படுகிறது

பொலிசாரைப் பொறுத்த வரை கனத்தையிலும் பார்க்க சுதந்திர சதுக்கம் பிரச்சினைகளை கையாள இலகுவாக இருக்கும் என்ற கருத்து நிலவியுள்ளது

இதற்கிடையில் கனத்தை அசம்பாவிதங்களில் சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்க பிரமுகர் அலவி மௌலானாவின் பெயர் தீவிரமாக பிரஸ்தாபிக்கப்படுவதாக தெரிகிறது

பொலிஸ் மா அதிபரே சனத்தையில் வைத்து இவரை எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும் ஜாதிக சிந்தனை என்ற சிங்கள இனவாத குழுவினர் தலைவர் பேராசிரியர் நளின் டி சில்வாவின் பெயரும் இந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக பலமாக பிரஸ்தாபிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

## அதிருப்தியாளர் ஆசன ஒதுக்கம் காரணமாக லோக்சபா ஒத்திவைப்பு

ஜனதா தளக் கட்சியில் அதிருப்தியாளர்களுக்கு தனியான இருக்கைகளை லோக்சபா சபாநாயகர் ஒதுக்கியது தொடர்பாக ஏற்பட்ட ஆட்சேபனைகளினால் லோக்சபா நேற்று நடவடிக்கைகள் எதையும் மேற் கொள்ளாது ஒத்திவைக்கப்பட்டது.

சபை நடவடிக்கை ஆரம்பமானதும் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரி முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் சபாநாயகரின் நடவடிக்கையை கண்டித்து சபை நடவடிக்கைகளை தடுக்கும் முகமாக சபையின் மையப்பகுதிக்குச் சென்று சுலோகங்களை எழுப்பினர்.

கட்சித் தாவல் சட்டம் சம்பந்தமாக விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து ராஜ்ய சபையிலிருந்து தேசிய முன்னணி மற்றும் இடதுசாரி முன்னணி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இதற்கிடையில் சமாஜ்வாதி ஜனதா கட்சித்தலைவர் தேவிலால் கட்சித் தாவல் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என கோரியுள்ளார்.

போட்டிப் பரீட்சை...

புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது

போட்டிப்பரீட்சையில் ஆசிரியர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படை திறமை மையை மையமாகவைத்து மாத்திரமே பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளது ஒவ்வொரு ஆசிரியரும் போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை பரீட்சைத்திணைக்களத்தால் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது இனக்கிதாசார படி வழங்கப்படவிருக்கும் பதவி உயர்வுக்கான வெட்டுப் புள்ளிகளும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையில் பெற்றபுள்ளிகளின் அடிப்படையில் தேர்வு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருக்கும் வெட்டு புள்ளிகளின் விவரம் இனரீதியாக வருமாறு

அதிபர் தரம் I:- சிங்களவர் 191, இலங்கைத்தமிழர்-178, இஸ்லாமியர்-176, இந்தியத் தமிழர்-150

அதிபர் தரம் II:- சி-175, இ.த-163, இ-163, இந்.த-134, பிறஇனத்தவர்-122

அதிபர் தரம் III: சி-94, இ.த-83, இ-90, இந்.த-42, பி.இ 43

## ஆவ்கான்பிரதமர் பதவி நீக்கம்

ஆவ்கானிஸ்தானின் ஆளும் தலைமை குழுவின் ஹிஸ்பி இஸ்லாமிய குழுவின் தலைவர் குல்புதீன் ஹெக்மதியாரினால் நியமிக்கப்பட்ட பிரதமர் அப்துல் சபூர் பறீத் அரசுத்தலைவர் றப்பானியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருவாரங்களாக ஆவ்கானிஸ்தானில் நடைபெறும் குழுக்களுக்கிடையிலான மோதல்களைத் தொடர்ந்து அரசுத்தலைவர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஆரம்பத்தில் இருந்தே ஹிஸ்பி இஸ்லாமிக் குழுவும் தலைமைக் குழுவில் அங்கம் வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது இதற்கிடையில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீவ் குண்டு வீச்சு தாக்குதல்களை நிறுத்துமாறு குல்புதீன் ஹெக்மதியாரை கேட்டுக்கொண்டுள்ளார்.

## மேலும் நால்வருக்கு நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றிய மேலும் நான்கு பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது இவர்களில் 3பேர் கல்வித் திணைக்களத்திற்கும் ஒருவர் சுகாதாரத் திணைக்களத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். 55


## பெயர் மாற்ற அறிவித்தல்

மிருசுவிலைச் சேர்ந்த F. J. C. செல்வராஜன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை F. செலவரஞ்சன என மாற்றிக் கொண்டுள்ளேன். இன்று முதல் நான் F. செல்வரஞ்சன் என்றே அழைக்கப்படுவேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

மிருசுவில் F. SELVARANJAN

08031


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 18 08- 92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது